# செய்திக்கலவை

தமிழ்மாத இதழ்

# SEITHI KALAVAI

TAMIL MAGAZINE

பிப்ரவரி 2024 செய்தி : 10 கலவை : 12 விலை ரூ : 15/- வருட சந்தா ரூ : 180/-

January 2024 Issue : 10 Volume : 12 Rs. : 15/- Annual Subscription : Rs. 180/-









மேற்கு வங்கத்தில் என்ன நடக்கிறது







பயங்கரவாத தடுப்புச்சட்டம் துவக்கம்

அன்றாடம் வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்

# பத்தாம் ஆண்டை நோக்கி உங்கள் செய்திக்கலவை

அன்பு வாசகர் நெஞ்சங்களுக்கு எனது வணக்கங்கள்

ஒரு தரமான இதழ்கள் தொடர்ந்து வெளி (கொணர்ந்து) வருவதில் உள்ள சிரமங்கள்அனைத்தும் தாங்கள் அனைவரும் அறியாததல்ல, இந்த செய்திக்கலவை மாத இதழை தொடர்ந்து மாதங்கள் கடந்து வருடங்கள் கடந்து ஒன்பது ஆண்டுகள் நிறைவுப்பெற்று பத்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

இது சாதரணமாக நடந்து விடவில்லை. பல சிரமங்க்களை கடந்து தான் தங்கள் கரங்களில் இப்பத்திரிக்கை தவழ்கிறது என்பதே உண்மை. வாசகர்களாகிய உங்கள் ஆதரவு இல்லை என்றால் இது சாத்தியமே இல்லை எனலாம்.

அதற்காக முதலில் உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். அடுத்து இதுநாள்வரை இதழ் தொடர்ந்திட என்னுடன் பத்திரிக்கை பணியில் பயணித்தவர்கள், அச்சகத்தார், பத்திரிக்கை முகவர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள்.

கடந்த காலங்களைப்போலவே இனிவரும் ஆண்டுகளிலும் எப்பொழுதும்போல ஆதரவு கொடுத்திட வேண்டுகிறேன்.

என்றென்றும் உங்களை நேசிக்கும்

எஸ்.ஆர். பாரதிராஜா
நிறுவனர், வெளியீட்டாளர், ஆசிரியர்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

பூங்குன்றனார்



# உள்ளே


ஆசிரியர் பக்கம் – மாலத்தீவு மங்கிடுமா ? ---------- 4-6

ஞானி ---------- 7

நோபல் பரிசு வந்தது எப்படி? ---------- 8-9

பயங்கரவாத தடுப்புச்சட்டம் துவக்கம் ---------- 10

அன்றாடம் தேவைப்படும் சட்டங்கள் ---------- 11

கருப்புநிலா கலங்கியது ஏன்? ---------- 12-22

செய்திக்கலவை பத்திரிக்கை சந்தா படிவம் ---------- 23

அயலான் திரைப்பட விமர்சனம் ---------- 24-25

மேற்கு வங்காளத்தில் என்ன நடக்கிறது? ஒரு பார்வை.... ---------- 26-28

ராணியின் சுவையான சமையல் ---------- 29

சிரித்தால் இன்ப மயம் ---------- 30


SEITHI KALAVAI INDIA

# இனி மங்கிடுமா? மாலத்தீவு



இந்திய பெருங்கடலின் நடுவில் அமைந்துள்ள சுமார் 1200 பவளப்பாறை தீவுகளை கொண்டது மாலத்தீவு. இது சிறிய தீவுநாடாக இருப்பதால் (இங்கு சுமார் 5,20,000 மக்கள் வசிக்கின்றனர்) உள் கட்டமைப்பு, இதன் மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றம், குறிப்பாக உணவு இவைகளின் தேவைகளுக்காக அருகில் இருக்கும் மிகப்பெரிய நாடான நமது பாரத தேசத்தையே பெரும்பாலும் நம்பி வாழக்கூடிய சூழல்தான் மாலத்தீவில் உள்ளது.

இப்படி இருக்க, தலைநகரான மாலேவில் உள்ள தேனீரகங்களிலும், உணவகங்களிலும் இந்தியாவின் ஆதரவை இழக்க நேரிட்டால், எந்த மோசமான நிலைக்கு மாலத்தீவு தள்ளப்படும் என்பதையே விவாதப் பொருளாக வைத்து பேசகின்றனர். இங்குவாழும் வசதியான மனிதர்களும் சரி, வியாபாரம் செய்வோரும் சரி, நமது தேசத்தின் வாயிலாக பல பயன் பாடுகளை பெற்று வாழ்ந்துவரும் பெரும்பாலான மக்களும் சரி, எங்கள் அரசுமீது எங்களுக்கும் வருத்தம் இருக்கிறது என்பதை வெளிப்படை யாகவே பேசுகிறார்கள்.

இந்தியாவினுடைய அணுகு முறையை நாம் மறந்திடலாகாது. இந்திய நாட்டுடன் நீண்ட நெடிய வலுவான கலாச்சார தொடர்புகள் உள்ளதோடு மட்டுமல்ல, கல்வி, மருத்துவம், ஏன் உணவுக்கும் இந்தியாவைத்தான் சார்ந்து வாழ்ந்து வருகிறோம், என்றும் ஆனால், ஆளும் அரசாங்கமும்சரி, அதிகாரிகளும் சரி, நிலைமைகளை சரியாக கணிக்க தவறிவிட்டனர் என்று மாலத்தீவின் ஜனநாயகக்கட்சியின் ஆதரவாளர் சஃபீக் தனது பதிவில் வேதனையுடன் சொல்லியுள்ளார்.



லட்சத்தீவு சுற்றுலா பயணத்தை ஊக்குவிக்கும் வகையிலான புகைப்படங்களை நமது பிரதமர் தனது X சமூக வலைதளத்தில் பதி விட்டிருந்தார். அதை தொடர்ந்துதான் நமது பாரத பிரதமர் நரேந்திர மோடியைப்பற்றி சமூக வலை தளங்களில் மாலத்தீவின் மூன்று அமைச்சர்கள் மிக இழிவான கருத்துக்களை வெளியிட்டனர். அதைத் தொடர்ந்து அங்கு பல மாற்றங்கள் நிகழ தொடங்கியுள்ளது.

மாலத்தீவின் வருமானத்திற்கு மிகப்பெரும் பங்களிப்பை கொடுத்துவரும் இந்திய சுற்றுலா பயணிகள் இத்தீவை புறக்கணிக்கத் தொடங்கியிருக்கும் மிகப்பெரிய அபாயக்கரமான நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது. இதைத் தொடர்ந்து பிரச்சனைக்குரிய அந்து மூன்று அமைச்சர்களையும் அமைச்சரவை யிலிருந்து நீக்கயதோடு, சமூக வலை தளங்களில் மோடிஜியை பற்றி வெளியிட்டது அவர்களின் சொந்தக்கருத்து தான் என்று மாலத்தீவு வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



பாரதப் பிரதமரை பயங்கரவாதி எனவும், இஸ்ரேலின் கைப்பாவை எனவும் அவர்கள் பதிவிட்டதை ஏற்றுக் கொள்ள இங்கு யாரும் தயாராக இல்லை. இனி மாலத்தீவிற்க்கு எந்த விதமான உதவிகளும் செய்திடலாகாது மற்றும் அங்கு நடக்கும் வியாபார தொடர்பை வியாபாரிகள் இனி புறக்கணிக்க வேண்டும் என்றும் நமது ஊடகங்கள் மட்டுமல்ல, ஏறத்தால அனைத்து மக்களிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது.

இந்தியாவின் மிகப்பெரிய வர்த்தக அமைப்புகளில் ஒன்றான ‘‘அனைத்து இந்திய வியாபாரிகள் கூட்டமைப்பு’’ இனி மாலத்தீவின் வர்த்தகத்தில் ஈடுபடமாட்டோம் என்று கூறியுள்ளது. இது ஒருவகையில் ஒட்டு மொத்த இந்தியர்களின் எதிர்பார்ப்பும் கூட.

இந்நிலையில் மாலத்தீவு புதிய அதிபர் முகமது முய்சு நாங்கள் யாரையும் நம்பி இல்லை எந்த நாட்டின் பின்புறத்திலும் மாலத்தீவு இல்லை, இந்த கடலில் மிகப்பெரிய பங்கைக் கொண்ட நாடுகளில் எங்கள் நாடும் ஒன்று. இந்தகடல் குறிப்பிட்ட நாட்டிற்கு மட்டும் சொந்தமில்லை. மாலத்தீவு சிறிய நாடாக இருக்கலாம் எங்களை கட்டுபடுத்த எந்த நாட்டிற்கும் உரிமையை நாங்கள் வழங்கவில்லை என்று சொன்னதோடு மட்டுமில்லாமல் இந்திய ராணுவத்தினரை மார்ச் மாதத்திற்குள் தங்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்பதாகவும் கூறியிருக்கிறார்.

முய்சுவுடைய பேச்சு அங்கு வசிக்கும் மக்களுக்கே கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சிலர் அதை வெளிப்படையாகவே பேசுகின்றனர். இந்திய ராணுவத்தின் (மாலத்தீவிற்கு வழங்கிய) மூன்று கடல் சார் மீட்பு மற்றும் கண்காணிப்பு விமானங்களை பராமரிக்கத்தான் மாலத்தீவில் இந்திய இராணுவத்தினர் இருப்பதாக இந்தியா சொல்கிறது. நீண்டகாலமாகவே இந்தியப் பெருங்கடல் தீபகற்பத்தில் இந்தியா செல்வாக்குடன் தான் உள்ளது.

சீனா சென்று திரும்பியதிலிருந்து ஏதோ மந்திரத்தில் வயப்பட்டவர் போல் மாலத்தீவு அதிபர் முகமது முய்சு பேசுவதுதான், நன்றியை மறந்த மனிதர் என இந்திய அரசியல் வல்லுனர்களால் கருதப்படுகிறது. கொரனா வந்து மக்களைத்தாக்கி அழித்தபோது, சீனா உதவவில்லை. விடுதலை புலிகள் நாட்டையே பிடித்து கொண்ட போது, சீனா உதவிக்கு வரவில்லை. இந்திய ராணுவம் தான் நாட்டை மீட்டுக் கொடுத்தது. இதை மறந்து எள்ளளவும்



நன்றி இல்லாமல் முய்சு பேசுவது மனித நேயத்தையே எள்ளி நகையாட வைக்கிறது.

அதுசரி மாலத்தீவு அதிபருக்கு எப்படி இவ்வளவு துணிச்சல் வந்தது ? காங்கிரஸ் கட்சி மோடிக்கு எதிராக பேசுகிறேன் பார்! என்று சொல்லி மாலத்தீவிற்கு ஆதரவாக பேசியதே அதனால் தானோ என்னவோ! மாலத்தீவை ஆள்பவர்கள் இப்படிப் பேசுகின்றனர். பாவம் முகமது முய்சுக்கு சீனாவைப்பற்றி எந்த அளவுக்கு தெரிந்திருக்கும்! அங்கு முஸ்லீம் மக்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்று? ஒரு சிலருக்கு பட்டால்தான் புத்திவரும், என்பார்களே அதுபோலத்தான் இதுவும் எனலாம்.

நமது பிரதமரை பகைத்துக் கொண்டவர்கள் பலர் இன்று காணாமலேயே போய்விட்டனர், அரசியல் களத்தில் காணாமல் போனவர்களும் உண்டு. கடந்த காலங்களில் பாரதத்தை பகைத்துக்கொண்ட பல நாடுகள் இன்று நமது பிரதமர் மோடியை நாடி, மீண்டும் நட்பை புதுபித்து ஆர்வமுடனும், முனைப்புடனும் செயல்படதுடிக்கிறது.

இந்த நிலையில் மாலத்திவீன் புதிய அதிபர் முகமது முய்சு இப்படியெல்லாம் பேசுவதற்கு ஒரு காரணமும் சொல்லப்படுகிறது சீனாவிடம் உறவு வைத்துக் கொண்டால் ஊழல் செய்து கல்லா கட்டலாம் என்றும், அது இந்தியாவிடம் செல்லுபடியாகாது என்றும் கூறுகிறார்கள். இந்தியா எந்த நிதியையும் சம்பந்தப்பட்ட அமைப்புகளுக்கு நேரிடையாகவே கொடுத்து செயல்படுத்துகிறது. அரசுக்கு கொடுத்தாலும் அதை சரியான வழியில் கவனமாக செய்வதால் கூட, முய்சுவுக்கு வருத்தம் இருக்கலாம். இந்த செயல்பாடுகள் இப்படியே தொடர்ந்து இருக்குமேயானால் முய்சு பதவி காலங்களில் அங்கு வாழும் பொதுமக்கள் பல இன்னல்களுக்கு ஆளாவதை எதிர்காலத்தில் கண்கூடாக காணவேண்டிவரும்.

**மாலத்தீவு போலவே கடற்பரப்புகள் அடங்கிய லட்சத்தீவுகள் மற்றும் அந்தமான் தீவுகள் எதிர்காலத்தில் மிகச் சிறந்த உலக மக்களைக் கவரும் சுற்றுலாத் தளமாக அமைந்திடும் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. அமைந்திட வாழ்த்துவோம்.**

மறுபதிப்பு




**"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு" - (குறள்:352)**

விளக்கம்
மயக்கம் நீங்கித் இத்தூய மெய்யுணர்வை உடையவர்க்கு அம்மெய்யுணர்வு நரகத் துன்பத்திற்கு காரணமான பிறப்பை நீக்கி வீட்டின்பத்தை கொடுக்கும்.



தன்னம்பிக்கை நாயகன்
**அமரர் ஏ. உதயசந்திரன்** B.Sc., B.L.,
(வரி ஆலோசகர், வழக்கறிஞர்)

# ஞானி

முனிவர் ஒருவர்மரத்தடியில் அமர்ந்து தம் வேட்டியில் இருந்த கிழிசலை தைத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு சிவ பக்தர். அப்போது சிவனும், பார்வதியும் வான் வழியே வலம் வந்து கொண்டிருந்தனர். மரத்தடியில் ஒளிப்பிழம்பாய் அமர்ந்திருந்த முனிவரைக் கண்டதும் உளம் நெகிழ்ந்த அம்மை, ஐயனைப் பார்த்து, மரத்தடியில் பார்த்தீர்களா? என்றாள். பார்த்தேன் என்றான் பரமன். பார்த்த பிறகு சும்மா எப்படி போவது? ஏதேனும் வரம் கொடுத்து விட்டுப் போகலாம் வாருங்கள் என்றாள் அம்மை. அட அவன் அந்த நிலை எல்லாம் கடந்தவன், இப்போது அவனிடம் செல்வது வீண்வேலை, வேண்டாம் வா நாம் நம் வழியே போகலாம் என்றார்.

ஆனால், பார்வதி விடவில்லை. ஐயனை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்து வந்து விட்டாள். வணக்கம் முனிவரே என வணங்கினர் அம்மையும் அப்பனும், முனிவர் நிமிர்ந்து பார்த்து அடடே எம்பெருமானும்!, பெருமாட்டியுமா! வரணும், வரணும் என்று வரவேற்றார் முனிவர். தாகத்திற்கு தண்ணீர் கொடுத்து உபசரித்தார். அவ்வளவுதான் மீண்டும் கிழிசலைத் தைக்கத் தொடங்கி விட்டார்.

சற்று நேரம் பொறுமையாக காத்திருந்து விட்டு, சரி நாங்கள் விடை பெறுகிறோம் என்றனர். அம்மையும் அப்பனும் மகிழ்ச்சியாய் போய் வாருங்கள் வணக்கம் என்று சொல்லி விட்டு, மீண்டும் கிழிசலைத் தைக்கத் துவங்கினார் முனிவர்.

அம்மை குறிப்புக் காட்ட அப்பன் பணிவாய் கேட்டார். முனிவரே நாங்கள் ஒருவருக்கு காட்சி கொடுத்து விட்டால் வரம் கொடுக்காமல் போவதில்லை எனவே தாங்கள் ஏதாவது வரம் கேளுங்கள் கொடுக்கிறோம் என்றார். முனிவர் சிரித்தார். வரமா உங்கள் தரிசனமே எனக்குப் போதும் வரம் எதுவும் வேண்டாம், உங்கள் வழியைத் தொடருங்கள் என்று சொல்லி பணியில் ஆழ்ந்தார். அப்பனும் அம்மையும் விடவில்லை ஏதாவது வரம் கொடுக்காமல் செல்ல மாட்டோம் என்று பிடிவாதமாய் நின்றனர்.

முனிவர் வேறு வழியின்றி ஒரு வரம் கேட்டார். நான் தைக்கும் போது இந்த ஊசிக்குப் பின்னாலேயே நூல் போக வேண்டும். அது போதும் என்றார். இதைக் கேட்ட அம்மையும், அப்பனும் திகைத்தனர். ஏற்கனவே ஊசிக்குப் பின்னால் நூல் போகிறதே இதற்கு நாங்கள் ஏன் வரம் தர வேண்டும், என்று அம்மை பணிவாய் கேட்டார். அதைத்தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்து கொண்டு வந்தால் வர வேண்டிய பலன் நியதிப்படி தானாகப் பின்னால் வருமே இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தர வேண்டும்? என்று கேட்டார் முனிவர். இதை கேட்ட ஐயன் அம்மையாரை பார்த்து புன்சிரிப்பாக சிரித்து பார்த்தாயா? நான் முன்பே சொன்னேன் கேட்டாயா? என்று சொன்னதை போல இருந்தது. அவரைப்பார்த்து புன்முருவல் செய்தார் பார்வதி. ஆமாம் உண்மைதான் என்பது போல் இருந்தது. பின்பு இருவரும் சிரித்து விட்டு அங்கு இருந்து சென்றனர்.

# நோபல் பரிசு வந்தது எப்படி?

Alfred Nobel



ஆல்பிரட் நோபல் இவர் கண்டுபிடித்தது தான் டைனமெட் மற்றும் ஜெல்லட்டின் இது சுரங்கங்கள் தோண்டுவதற்கும், அதிபயங்கர யுத்தங்கள் செய்வதற்கும் ஏன், உயிர்களைக் கொல்வதற்கும் கூட பயன்பட்டது. இன்றும் அது பயன்படுகிறது. இதை ஆல்பிரட் நோபல் 1867 ஆம் ஆண்டு கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தார். இதன் விளைவாய் அவருக்கு வருவாய் குறைவில்லாமல் எட்டு திசைகளிலும் இருந்து செல்வங்கள் வந்து குவிந்ததோடு மட்டுமல்லாமல், உடன் புகழும் வந்து சேர்ந்தது. இதனால், அந்த மனிதர் எவ்வளவு சந்தோசப்பட்டிருக்க வேண்டும்? எவ்வளவு பெரிய ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும் அல்லவா, அதுதான் இல்லை. அதற்கு மாறாக அவரது மனம் துன்பப்பட்டது. சதாகாலம் அவரை சோகம் தன் பிடியில் வைத்திருந்தது என்றால் மிகையாகாது.

காரணம், டைனமெட்டை கண்டு பிடித்த போது தன் கண் முன்னே தனது சகோதரர் உடல் முழுவதும் கருகி இறந்து போனார். அது ஆல்பிரட் நோபலை மிகவும் பாதித்தது. அதோடு மட்டுமில்லாமல், வேறொரு வேதனையும் அவரைத் தொற்றி கொண்டது.

தான் கண்டுபிடித்த பொருள்களால் உலகில் பல்லாயிரக் கணக்கான மனித உயிர்கள் பலியாகிவிடுமோ என்பதுதான் அது.

தான் கண்டுபிடித்த டைனமெட்டால் ஒட்டுமொத்த நாடுகள் யுத்தம் தொடங்கி அது உலக யுத்தமாக வந்து விட்டால் இந்த பூமி பந்தில் மிஞ்சுவது என்ன? ஒன்றுமே இருக்காதே என்று வருந்தி ஏன் இந்த தவறை செய்தோம் என சிறுக, சிறுக மனம் சிதைந்து நோக தொடங்கியது. இதற்கு மாற்று வழிதான் என்ன என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். அதன் பயனாய் ஒரு திட்டம் தயார் செய்து அதை உலகமே ஒன்றுமையுடன் வாழ வேண்டும் எனக் கருதி தான் கண்டுபிடித்த டைனமெட்டை பயன்படுத்தும் நாடுகளிடம் தான் தயாரித்த திட்டத்தைப்பற்றி எடுத்து உரைத்தார். ஆனால், அதை அந்த நாடுகள் ஒன்று கூட சட்டை செய்யவில்லை. இன்னும் சொல்ல போனால், அவரை சுத்தமாக உதாசினப்படுத்தி செவி சாய்க்க மறுத்துவிட்டது. காரணம் அவர் கண்டுபிடித்ததை விலைக்கு விற்றுவிட்டார். அதோடு அவருடைய பணி முடிந்தது என்பதுதான்.

இதனால்தான் வாழ்வே நொறுங்கி போனதாக உணர்ந்தார், ஆல்பிரட் நோபல். ஒரு சல்லி

காசுக்கூட தன் கையில் வைத்துக் கொள்ளாமல் ஒட்டு மொத்தமாக அனைத்தையும் தன் பெயரிலேயே ஒரு அறக்கட்டளையை நிறுவினார்-தான் சம்பாதித்த செல்வங்களையெல்லாம் அதில் சேர்த்துவிட்டு, இந்த பூமி பந்தில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் குறைவில்லா வாழ்வு வாழ்ந்திட, பல ஆராய்ச்சிகள் மூலம் பல அறிய பயனுள்ள கண்டுபிடிப்புகளை வெளிகொணர்ந்து கொடுப்பவர்களுக்கு, தன்னுடைய அறக்கட்டளை மூலம் பாராட்டும், விருதும் மேலும் ஊக்கு விக்கும் வகையில் ஊக்கத்தொகையும் வழங்க வேண்டும் என்று பதிவிட்டபின் அனாதையாக இறந்துபோனார்.

இன்று உலகளவில் இது உன்னதமான மிகப்பெரிய உயரிய விருதாகக் கருதப்படுகிறது. இவ்விருதினை பெறுகிறவர்கள் உலக மக்களால் போற்றத்தக்கவர்களாக மிகப்பெரிய மதிப்புடையவர்களாக கருதப்படுகிறார்கள். ஆல்பிரட் நோபல்



ஒரு நல்ல மனம் கொண்ட மனிதர் மட்டுமல்ல, பிற உயிர்களிடத்தும் இரக்கம் கொண்டவர் என்பதை உலகுக்கு பறைசாற்றி சென்று உள்ளார். இவரின் பெயரில் வழங்கப்படும் நோபல் பரிசுக்கு பிதாமகன், ஆல்பிரட் நோபல் என்பதோடு அவர் ஒரு பெருமதிப்பிற்குரிய மனிதர் ஆவார். தவறான பாதையில் ஒருவர் பயணம் செய்யும் சூழலை உணர்ந்து அதிலிருந்து முழுமையாக வெளியேறிவிட்டால் அதை விட வேறு மன்னிப்பு இல்லை என்பதை இதன் மூலம் நிரூபித்து சென்ற ஆல்பிரட் நோபல் எண்ணம் என்றும் பிரதிபலிக்கட்டும் நாமும் ஒருமுறையாவது அவரைப்பற்றி சிந்திப்போம், சீர்பெறுவோம்.

P. ஜோதிமணி ECE


## செய்திக் கலவை மாத இதழ்



**வண்ணத்தில்:**

| | | |
|---|---|---|
| பின்பக்க அட்டை | : | ரூ. 25,000/- |
| நடுப்பக்கம் (2) | : | ரூ. 30,000/- |
| உள்பக்க முன் அட்டை | : | ரூ. 20,000/- |
| உள்பக்க பின் அட்டை | : | ரூ. 15,000/- |

**கருப்பு வெள்ளையில்**

| | | |
|---|---|---|
| உள் முழுப்பக்கம் | : | ரூ. 10,000/- |
| நடுப்பக்கம் (2) | : | ரூ. 15,000/- |
| உள் அரைப்பக்கம் | : | ரூ. 5,000/- |

**விளம்பரத் தொடர்புகளுக்கு :**
86, மருதம் காம்பளக்ஸ், காமராஜர் பாதை,
சிங்காநல்லூர், கோவை – 641 015.
தொலைபேசி 0422 2670748


## வாசகர்களின் கவனத்திற்கு

**செய்திக் கலவை**



மாத இதழுக்குச் செய்திகள் அனுப்புவோர் வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். செய்திக்கு உரிய புகைப்படங்கள் இருப்பின் அவற்றின் பின்பக்கம் சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டு எழுத வேண்டும். தேவை ஏற்படின் தங்களைப் பற்றிய விவரம் பாதுகாக்கப்படும். செய்திகளைச் சுருக்கவும், திருத்தம் செய்யவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. செய்திகளைப் பிரதி மாதம் 15 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு:

86, மருதம் காம்பளக்ஸ், காமராஜர் பாதை, சிங்காநல்லூர், கோவை – 641 015. கைபேசி : 98946 09748

# பயங்கரவாத தடுப்புச் சட்டம் துவக்கம்





திரு.சசிமோகன்

புதியதாக பயங்கரவாத தடுப்புப்பிரிவு கோயமுத்தூரில் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு கண்காணிப்பாளராக சசிமோகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தலைமையில் ஒரு துணை கண்காணிப்பாளர் மூன்று ஆய்வாளர்கள் உள்பட நாற்பது காவலர்கள் பணிபுரிய உள்ளனர்.

இந்த பயங்கரவாத தடுப்புப் பிரிவின்அலுவலகம் கோயமுத்தூர் காந்திபுரத்திலுள்ள சி.பி.சி.ஐ.டி சிறப்பு புலனாய்வு பிரவு அலுவலகத்தில் தற்சமயம் இயங்கத்தொடங்கி உள்ளது.

இதுகுறித்து காவல்துறை அதிகாரிகள் கூறியதாவது திருப்பூர், ஈரோடு, சேலம் என மேற்கு மண்டலத்தில் உள்ள எட்டு மாவட்டங்களில் நடைபெறும் பயங்கரவாதம் தொடர்பான வழக்குகள் இங்கு விசாரிக்கப்படும் எனவும் மேலும் சட்ட விரோதசெயல்கள் தடுப்புச்சட்டம் பிரிவுகளின் கீழ்பதிவு செய்யப்படும் வழக்குகள் இங்கு விசாரிக்கப்படும் என்றும், இந்த பயங்கரவாத தடுப்பு பிரிவானது விரைவில் தொண்ணுறு காவலர்களுடன் இயங்கும் எனவும் கூறியுள்ளனர்.

இந்த பிரிவுக்கு விரைவில் தனிக்கட்டிடம் கட்டப்பட உள்ளது. அதற்காக மூன்று இடங்கள் தேர்வாகியுள்ளது. இதில் ஏதாவது ஒரு இடம் விரைவில் இறுதி செய்யப்பட்டு கட்டிடம் கட்டப்படும். இந்த பயங்கரவாத தடுப்புப்பிரிவில் அனைத்து வகையான ஆயுதங்களையும் கையாளத்தெரிந்த தாக்குதல் குழு, உளவு தகவல்களை சேகரிக்கும் குழு உள்ளிட்ட குழுக்கள் இடம் பெற்றிருக்கும்.

எங்களது உளவுப்பிரிவினர் பல்வேறு தடைசெய்யப்பட்ட அமைப்புகளின் ஆதரவாளர்களைப் பற்றிய விபரங்ளை கொண்ட தரவுத்தளத்தை உருவாக்குவார்கள். பிற மாநிலத்தில் உள்ள உளவுப் பிரிவுகளுடன் இந்த தகவல்கள் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலமாக பயங்கரவாத செயல்களை கட்டுப்படுத்தி அதை தடுத்திட முடியும்.

மேற்கண்டவாறு காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

V.ராஜ்மோகன்

SEITHI KALAVAI INDIA

# அன்றாட வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்
# கேள்வி பதில்



**101**

குற்றவியல் வழக்கறிஞர் முனைவர். **ஏ.பி.ஜெயச்சந்திரன்**
M.A., (Crimin), M.Phil (Police Admin), Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD M.Sc., (Psy)
Cell :98430 30210

**கேள்வி :** ஏழைகள் முன் ஜாமீன் பெற முடியுமா?

**பதில் :** ஜாமீனில் வெளிவரக்கூடிய சிறு, சிறு குற்றங்கள் செய்திருந்தால் இந்தியப் பிரஜைகள் அனைவரும் முன் ஜாமீன் பெற அருகதை உண்டு.

**கேள்வி :** எத்தனை ஆண்டுகள் பிரிந்திருந்தால் விவாகரத்து பெறலாம்?

**பதில் :** ஒரு ஆண்டு கணவனும், மனைவியும் பிரிந்திருந்தால், விவாகரத்து பெறுவதற்கான காரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

**கேள்வி :** ஒரு வழக்கில் போலீசார் யாரை வேண்டுமானாலும் விசாரிக்கலாமா?

**பதில் :** வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரிக்கலாம் ஆனாலும், பதினைந்து வயதுக்கு கீழ் உள்ளவர்களை காவல் நிலையம் வந்து வாக்கு மூலம் தர வரச் சொல்லக்கூடாது. அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்றுதான் விசாரிக்க வேண்டும். எழுத்து மூலமாக பெற வேண்டும் என காவல் துறை அதிகாரி வரச்சொல்வாரேயானால், சம்பந்தப்பட்ட சாட்சிக்கு வந்து செல்ல ஆகும் செலவுத் தொகையை காவலரே தரவேண்டும். இது குற்றமுறை விசாரணைச் சட்டப்பிரிவு 160-ல் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

**கேள்வி :** பொது ஊழியர் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டால், அவர் உடனடியாக தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்படுவாரா?

**பதில் :** வெறும் முதல் தகவல் அறிக்கை மட்டும் தாக்கல் செய்திருந்தால், தற்காலிக பணி நீக்கம் செய்ய முடியாது ஆனால், காவலரால் கைது செய்யப்பட்டு நாற்பத்தெட்டு மணி நேரம் மத்திய சிறையில் இருந்திருந்தால் அவரை நிர்வாகம் உடனடியாக தற்காலிகப் பணி நீக்கம் செய்துவிடும். இவ்வாறு இருக்கும் காலத்தில் நிர்வாகம் பாதிச் சம்பளத்தை பிழைப்பு ஊதியமாக அவருக்குக் கொடுக்க வேண்டும்.

**கேள்வி :** எனது நண்பரின் இரண்டு சக்கர வாகனம் திருட்டுப் போய் விட்டது.

முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தோம் இன்சூரன்ஸ் (காப்பீடு) நிறுவனத்தில் முதல் தகவல் அறிக்கை கேட்கின்றனர். ஆனால் காவல் துறையினர் நகல் தராமல் இழுத்தடிக்கின்றனர். முதல் தகவல் அறிக்கை பெற எங்களுக்கு உரிமையில்லையா?

**பதில் :** குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 154(2) ன் படி, முதல் தகவல் அறிக்கையின் நகலை புகார் தாரருக்கு இலவசமாக வழங்க வேண்டும். காவல் துறையினர் கொடுக்காமல் இருக்கக்கூடாது. காவலர்கள் முதல் தகவல் அறிக்கையின் நகலை தராமல் இழுத்தடித்தால் காவல் கண்காணிப்பாளர், இல்லையேல் காவல் ஆணையர் ஆகிய உயர் அதிகாரிகளிடம் முறையிட்டால் நிவாரணம் கிடைக்கும்.

# கருப்புநிலா கலங்கியது ஏன்?



மதுரை அருகேயுள்ள திருமங்கலத்தில் ஆண்டாள் அழகர் தம்பதியினருக்கு நாராயணன் விஜயராஜ் அழகர்சாமி, 25.08.1952-ல் மகனாகப் பிறந்தார் விருது நகர் மாவட்டம் அருப்புக் கோட்டைக்கு அருகில் உள்ள இராமானுசபுரம் என்ற சிறு கிராமம் தான் இவர்களது பூர்வீகம், இவருக்கு ஒரு வயதானபோதே இவரது தாயார் இறந்து விட்டார். சிறு வயதிலேயே இவரது குடும்பம் மதுரைக்கு இடம் பெயர்ந்தது. ஆகவே, விஜயராஜ் மதுரையில் மேல மாசி வீதியில் வசித்து வந்தார். இவர் தன் தொடக்க கால பள்ளிப்படிப்பை தேவகோட்டையில் உள்ள தேபிரித்தோ மேல் நிலைப் பள்ளியிலும், மதுரையிலுள்ள நாடார் உயர்நிலைப் பள்ளியிலும், படித்தார். நெல்லை மாவட்டம் விக்கிரம சிங்கபுரம் பகுதியிலுள்ள புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளியின் விடுதியில் தங்கியிருந்து 1966 ஆம் ஆண்டு முதல் 1968 வரை 9,10 வகுப்புகளில் கல்வி கற்றார். சிறு வயதிலிருந்து சினிமா மீது கொண்ட ஆர்வத்தால், படிப்பில் இவர் கவனம் செல்லவில்லை, பிறகு தந்தையின் மேற்ப்பார்வையில், கீரைத்துறை மாகாளிப்பட்டியில் இயங்கிய அரிசி ஆலையில் தனது பதின்மவயதில் சிறு, சிறு பணிகளை செய்து வந்தார்.

மதுரையை பூர்வீகமாக கொண்டதால், சிறுவயது முதல் விஜயராஜ் மற்றும் இப்ராஹீம் இருவருமே இணை பிரியாத நட்பில் வலம் வந்தனர். விஜயராஜின் சினிமா



கனவை நனவாக்குவதை தனது லட்சியமாக கொண்ட ராவுத்தர், விஜயராஜீவைக் கூட்டிக் கொண்டு சென்னை கிளம்பினார். அவரின் சினிமா கனவுகளுக்கு உறுதுணை யாகவும், பக்க பலமாகவும் இருந்தார் உயிர் நண்பரான இப்ராஹீம்இராவுத்தர். இளம் வயதிலிருந்தே சினிமா அதிகம் பார்த்தார் விஜயராஜ் அதில், எம்ஜி.ஆர் படம் பற்றி நண்பர்களிடம், நடித்தும் வசனம் பேசியும் காட்டுவார். அதில், நட்பு வட்டம் அதிகரித்துக் கொண்டே போனது அவர் வீடிருந்த வீதியில்தான் மதுரை விநியோகிஸ்தர்கள் அலுவலகங்கள் இருந்தன. அதில் குறிப்பிட தக்கவரும், சேனாஸ் பிலிம்ஸ் உரிமையாளருமான முகமது மன்சூர் விஜயகாந்திற்கும் அவர் நண்பர் களுக்கும் நன்கு அறிமுகமானவர். அவர்

"ஆட்டுக்கார அலமேலு" படத்தை மதுரை ஏரியாவிற்கு வாங்கி வெளியிட்ட போது அந்த மாவட்டம் முழுவதும் வெளியான திரை அரங்குகளுக்கு ஆடு அழைத்து சென்று விளம்பரம் செய்ய உதவியாக இருந்தவர் விஜயகாந்த் (எ) விஜயராஜ்.

தனது நண்பர்கள் உந்துதலின் மூலமும் தனக்கிருந்த ஆர்வத்தாலும், சினிமாவில் நடிப்பது என முடிவு செய்து சேனாஸ் பிலிம்ஸ் மன்சூரிடம் தனது எண்ணத்தை விஜயகாந்த் தெரிவித்திருக்கிறார். அவரை சென்னைக்கு வரவழைத்து இயக்குனர் பி.மாதவனிடம், இவர் என் தம்பி மாதிரி என்று அறிமுகப்படுத்தி, நடிக்க வாய்ப்புக் கேட்டுக்கொண்டார் சேனாஸ் பிலிம்ஸ் மன்சூர். அப்போது, இயக்குனர் பி.மாதவன் என் கேள்விக்கு என்ன பதில்? என்கிற படத்தை இயக்கும் வேலையில் இருந்தார். அந்தப்படத்தை மதுரை ஏரியாவிற்கு சேனாஸ் பிலிம்ஸ் தான் வாங்கியிருந்தது, ரஜினியை போன்று முடிவெட்டும், ஸ்டைலுமாக இருந்த விஜயகாந்தை பார்த்ததும் இயக்குனர் பி.மாதவனுக்கு பிடித்து விட்டதாம் அந்தப்படத்தில் ரஜினிக்கு தம்பியாக நடிக்க வைத்து விடலாம் என்று தெரிவித்தாராம்.

*1978* ல் என் கேள்விக்கு என்ன பதில்? திரைப்படத்தில் ரஜினிகாந்தின் தம்பியாக ஒரு துணை கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்தனர். இவருக்கு *101* ரூபாய் முன்பணம் கொடுக்கப்பட்டது எனினும், மூன்று நாள் மட்டுமே நடித்ததற்குப் பிறகு, இவர் நீக்கப்பட்டு, இவரது கதாபாத்திரத்தில் ஏ.ஈ. மனோகரன் நடிக்க வைக்கப்பட்டார். இவரது தொடக்ககால திரை வாழ்க்கையின் போது பிற திரைப்படத் தயாரிப்பாளர்களால் இவர் பல பட வாய்ப்புகளை இழந்தார். இதற்கு காரணம் இவர் கருப்பான தோல் நிறத்தைக் கொண்டதாக கூறப்பட்டது.




எம்.ஏ. காஜாவின் "இனிக்கும் இளமை"(*1979*) திரைப்படத்தில் இவருக்கு வாய்ப்புத் தந்தால் மதுரை ஏரியாவை வாங்கி கொள்வதாகக் கூறி மதுரை சேனாஸ் பிலிம்ஸ் முகம்மது மன்சூர் அந்தப் படத்தில் வில்லன் வேடத்தை இவருக்குப் பெற்று தந்தார். இத்திரைப்படத்தில் தான் இவரது பெயரை விஜயராஜ் என்பதிலிருந்து விஜயகாந்த் என எம்.ஏ.காஜா மாற்றினார். திருப்பூர் பனியன் நிறுவனத்தில் பணியாற்றிய தன் நண்பர்கள் கொடுத்த ஆடைகளை அணிந்து இத்திரைப்படத்தில் நடித்தார் எனினும், இத்திரைப்படம் விமர்சனம் மற்றும் வணிகரீதியில் தோல்வியடைந்தது. இதை தொடர்ந்து இவர் கதாநாயகனாக அகல் விளக்கு ( *1979*) என்ற திரைப்படத்தில் நடித்தார் அத்திரைப் படத்தின் படப்பிடிப்பில் அதிகாலையிலேயே அழைத்து சென்று,

கதாநாயகி வரப்போவதைக காரணம் காட்டி பிற்பகல் மூன்று மணிவரை இவரை உணவு உண்ண அனுமதிக்க வில்லை. பசியை மறைத்துக்கொண்டு நடித்தார் அதன் பின்னரே, உணவு உண்ண அனுமதிக்கப்பட்டார். தன் பட நிறுவனத்திற்கு வரும் அனைவருக்கும் உணவு கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்நிகழ்விற்கு பிறகு தான் இவருக்கு உருவானது. இவரது *1980* ஆம் ஆண்டு படம் தூரத்து இடி முழக்கம் இந்திய சர்வதேச திரைப் படவிழாவில் திரையிடப்பட்டது. இத்திரைப்படத்தில் இவரின் நடிப்பு




பாராட்டப்பட்டது. இவருக்கு ஒரு அங்கீகாரத்தையும் கொடுத்தது. தான் வளர்ந்து வந்த ஆண்டுகளில் *1981* ஆண்டு ''சிவப்புமல்லி'' மற்றும் சாதிக்கொரு நீதி போன்ற புரட்சிகரமான சிந்தனைகளைக் (பொதுவுடைமை வாதம் மற்றும் மார்க்சியம்) கொண்ட திரைப்படங்களில் இவர் நடித்தார் இத்திரைப்படங்களில் இவர் புரட்சி செய்யும் கோபக்கார இளைஞராக நடித்திருந்தார். எனினும் வணிகரீதியாக ஒரு கதாநாயகனாக இவரை முன்னிறுத்திய படம் எஸ்.ஏ. சந்திரசேகரின் சட்டம் ஒரு இருட்டறை *1981*ல் சட்டம் ஒரு இருட்டறை படத்திற்கு முதலில் பிரபுவிடம் கதை சொன்ன இயக்குனர் எஸ்.ஏ.சந்திரசேகர், இது ஆக்சன் கதையாக இருக்கே, என்று பிரபு தயங்கியதும், பிறகு நிறைய புது முகங்களை அழைத்துப்பார்த்தார்கள் யாரும் தேறவில்லை.

ஒருநாள் உதவி இயக்குனர் கருப்பர் வாகினி ஸ்டுடியோ வாசலில் நின்று பேசிக் கொண்டிருந்த போது, அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் சென்ற விஜயகாந்தின் நெருப்புக்கண்கள் எஸ்.ஏ.சந்திரசேகருக்கு மிகவும் பிடித்து விட்டது. உடனே அவரைப் பிடிக்கச் சொல்லி உதவியாளர்களை விரட்டி இருக்கிறார். அவர்கள் விஜயகாந்தை அழைத்து வந்தார்கள். நாங்கள் ஒரு படம் எடுக்க இருக்கிறோம் நீங்கள் நடிக்கீறீங்களா? என்று இயக்குனர் எஸ்.ஏ. சந்திரசேகர் கேட்க, நான் நடிக்கத் தான் முயற்சி பண்ணிட்டு இருக்கேன். இப்போது ஒரு படத்தில் நடிச்சிட்டு இருக்கேன் என்றும், தன் பெயரை விஜயராஜ் என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு தொடங்கியது தான் சட்டம் ஒரு இருட்டறை தமிழில் மிகப் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. பிறகு ஓம்சக்தி *1982* என்ற படத்தில் வில்லனாக நடித்தார். இவரது பெரும்பாலான திரைப்படங்கள் ஊழல், நேர்மை மற்றும் கொடுத்த

இப்படி விஜயகாந்தை டாப் ஹீரோ ஆக்குவதில் ராவுத்தரின் நகர்வு, கச்சிதமான வியாபாரக் கணிப்பு எனலாம் ராவுத்தர் சொன்னால் சரியாக இருக்கும் என்று மறு பேச்சில்லாமல் ஓகே சொல்வாராம் விஜயகாந்த். கால்ஷீட் கொடுப்பது, சம்பளம் பேசுவது, கதை கேட்பது முதல் அனைத்துமே ராவுத்தரே கவனித்து வந்தார். விஜயகாந்தின் சினிமா கேரியர் இப்படித்தான் இருக்க வேண்டும் என பார்த்துப்பார்த்து வடிவமைத்து கேப்டனை வெற்றி பெற வைத்தார் ராவுத்தர். எப்போதுமே நண்பன் இராவுத்தரின் பேச்சிற்கு விஜயகாந்த் மறுவார்த்தை பேசியது கிடையாதாம். தனக்கு விருப்பம் இல்லாத போதும் ராவுத்தர் சொன்னதற்காக பல படங்களில் நடித்துள்ளார் விஜயகாந்த்.

அதில் ஒன்று தான் ஆர்.கே.செல்வமணி இயக்குனராக அறிமுகமான ''புலன் விசாரணை'' அப்போது விஜயகாந்திற்கும், செல்வமணிக்கும் ஒத்தே போகாதாம் ராவுத்தர்தான் இருவருக்கும் இடையில் சமரசம் செய்து வைத்து புலன் விசாரணையில் நடிக்க வைத்தார். இப்படத்தில் விஜயகாந்த் நடித்தே தீர வேண்டும் என ராவுத்தர் கண்டிஷன் போட்டிருந்தாராம். அதனை விஜயகாந்த் தட்ட வில்லை என்பதும் குறிப்பிடதக்கது. பூந்தோட்டக் காவல்காரனுக்கு பிறகு எந்தப்படமும் வெற்றி பெறாததால் விஜயகாந்திற்கு திருமணம் நடக்கவிருந்த நேரத்தில் விஜயகாந்த் கண்டிப்பாக ஒரு வெற்றிப்படத்தில் நடிக்கவேண்டும் என நினைத்த ராவுத்தர் புலன் விசாரணை சரியாக இருக்கும் என முடிவெடுத்துள்ளார். அவரின் கணிப்பு சரியாக இருந்தது. அதன் பின்னரே பிரேமலதாவை விஜயகாந்திற்கு திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்துள்ளார். தன் நண்பனின் அடுத்த இலக்கு அரசியல் என்பதை கச்சிதமாக கணித்து, அதனை வடிவமைத்ததும் இப்ராஹீம் ராவுத்தர் தானாம். அவரை அரசியல் தலைவராக அணு,அணுவாக செதுக்கியதில் இராவுத்தருக்கும் முக்கிய பங்கு உள்ளது அனைவரும் அறிந்ததே. ''கேப்டன்'' என்ற அடைமொழி விஜயகாந்திற்கு வர காரணமாக இருந்த ராவுத்தர் அவரை தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக மாற்றிவிட வேண்டும் என்பதிலும் தீவிர கவனம் செலுத்தினார்.



1990 ல் விஜயகாந்த் பிரேமலதாவை திருமணம் செய்து கொண்டார். இவ்விழா மதுரை தமுக்கம் மைதானத்தில் கலைஞர் தலைமையில் ரசிகர்கள் முன்னிலையில் பிரமாண்டமாக நடந்தது. இவர்களுக்கு விஜயபிரபாகரன், சண்முகப் பாண்டியன் என இருமகன்கள் உள்ளனர்.



SETHIKALAVAI INDIA

ராவுத்தர் விஜயகாந்திற்காகவே மூன்று தயாரிப்பு நிறுவனங்களைத் தொடங்கி ஏராளமான படங்களில் ஹீரோவாக நடிக்க வைத்தார். அப்படி ஹிட்டான படங்களின் பட்டியலும் பெரியது. பூந்தோட்டக் காவல்காரன், பாட்டுக்கு ஒரு தலைவன், என் ஆசை மச்சான், புலன் விசாரணை, கேப்டன் பிரபாகரன், சக்கரைத்தேவன், பரதன், உளவுத்துறை, உழவன் மகன், ராஜதுரை, கருப்புநிலா, தர்மா ஆகிய படங்களை குறிப்பிடலாம். இதில் தர்மாவிலேயே இவர்களின் நட்பு விரிசல் கண்டது. விஜயகாந்தின் சில அரசியல் முடிவுகள் இப்ராஹீம் ராவுத்தருக்கு பிடிக்காமல் போனது. ஒரு கட்டத்தில் அவர்கள் நட்பு முற்றிலும் முடிவுக்கு வந்தது. ஆனாலும், ராவுத்தர் மறைவிற்கு பின்னர் அவரது இல்லம் சென்று சிறு குழந்தையைப் போல குலுங்கி குலுங்கி கண்ணீர் மல்க விஜயகாந்த் அழுதது பார்ப்பவர்களையும் கண்கலங்கச் செய்தது. 1990 முதல் 1999 வரை இவர் நடித்த படங்களில் பெரும் பாலானவை அதிரடித் திரைப்படங்களாக அமைந்தது. இது அவருக்கு பெரிய ரசிகர் பட்டாளத்தையும், அவரது அரசியல் கனவிற்கு தீனியாகவும் அமைந்தது. 1999ல் நடிகர் சங்கத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் விஜயகாந்த். பல ஆண்டுகளாக அடைக்க முடியாமல் இருந்த சங்கக்கடனை சிங்கப்பூர், மலேசியா என தமிழர்கள் அதிகம் வாழும் வெளிநாடுகளில் நட்சத்திர கலை விழாக்கள் நடத்தி வட்டியும் முதலுமாக அடைத்தார். மேலும், நலிவடைந்த கலைஞர்களுக்கு உதவி செய்ய ஒய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்து , பெரும் தொகையை வங்கியில் டெபாசிட் செய்தார். 2002 ஆம் ஆண்டு காவிரி நதிநீர் பிரச்சனை உச்சத்தில் இருந்த போது, அனைத்து நடிகர்களையும் ஒன்றிணைத்து ''நீர் தராத கர்நாடகாவிற்கு மின்சாரம் இல்லை'' என்ற முழக்கத்துடன் மாபெரும் போராட்டத்தை நெய்வேலியில் நடத்தினார்.



தமிழர் மீதும், ஈழத்தமிழர் மீதும் தனிப்பற்று கொண்டிருந்தார். 1965 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் சிறுவயதிலேயே விஜயகாந்த் பங்கேற்றதாக சொல்லப்படுகிறது. அதே போல், 1984ல் ஈழத்தமிழர்கள் மீதான படுகொலையை நிறுத்தவும், நீதிவேண்டியும், தமிழக ஆளுநரிடம் மனு கொடுத்தார். பின் 1986 ஆம் ஆண்டு அதே காரணங்களுக்காக சென்னை வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும், ஈழத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருந்தார் விஜயகாந்த். அவரின் ரசிகர் மன்றத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதுமுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகத்தின் முன்பும் ஈழத்தமிழர்களுக்காக உண்ணாவிரதம்

மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுத்தும், 1989 களில் மண்டபம் உள்ளிட்ட முகாம்களில் அகதிகளாக வசிப்பவர்களுக்கு உதவி புரிந்தும் வந்தார். ஈழத்தமிழர்களின் உணர்வை உணர்ந்தவராக ஈழத்தமிழர்கள் அழும் போது என்னால் கொண்டாட்டத்தில் இருக்க முடியாது என்று கூறி தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தை தவிர்த்தார். (பின்னாளில் அவரின் பிறந்த நாள் வறுமை ஒழிப்பு நாளாக, அறிவிக்கப்பட்டு ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது) தனது நூறாவது படத்திற்கு கேப்டன் பிரபாகரன் எனவும், தனது மூத்த மகனுக்கு விஜயபிரபாகரன் எனவும் பெயர் வைத்து தமிழ் விடுதலைப் புலிகளின் மீதும், ஈழத்தின் மீதும் தனக்கிருந்த பற்றை பறை சாற்றினார்.

தென்னிந்திய, அகில இந்திய என்றிருந்த தனது ரசிகர் மன்றத்தின் பெயரை 1982 ல் தமிழ்நாடு விஜயகாந்த் தலைமை ரசிகர் மன்றம் எனவும், பெயர் மாற்றம் செய்தார். விஜயகாந்த் அரசியலுக்கு வருவதற்கு முன்பாகவே 1989ல் ஈரோட்டில் இலவச மருத்துவ மனை, சென்னை சாலிகிராமத்தில் இலவச மருத்துவமனை, ஆண்டு தோறும் பள்ளி மாணவர்களுக்கு லட்ச கணக்கில் கல்வி நிதியுதவி, எம்.ஜி.ஆர் காது கேளாதோர் வாய் பேசாதோர் பள்ளி மற்றும் லிட்டில் ஃபிளவர் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு நன்கொடை, தமிழகம் முழுவதும் அறுபது இடங்களில் இலவச கணினி பயிற்சி மையம், ஏராளமான ஏழை ஜோடிகளுக்கு இலவசத்திருமணம், கேப்டன் ஸ்போர்ட்ஸ் அகாடமி எனக் கலக்கியவர். மேலும், குஜராத் பூகம்பம், கார்கில் போர், சுனாமி, கும்பகோணம் பள்ளி தீ விபத்து, என பல சோக நிகழ்வுகளுக்கும் தன் சொந்த செலவில் நிவாரணங்களை கொடுத்து உதவி வந்தார். அரசியல் கட்சி தொடங்கிய



பின்னர் தானே புயல், ஆந்திரா புயல், ஒடிசா வெள்ளம் என்று பாரபட்சமின்றி முதல் ஆளாக முன்வந்து நிவாரணங்களை வழங்கினார். மேலும், பல்வேறு தமிழ் சார்ந்த உரிமைப் போராட்டங்களை முன்னின்று நடத்தினார் இது போன்ற எண்ணிலடங்கா சாதனைகளுக்குச் சொந்தக்காரர் என விஜயகாந்தை சொல்லலாம்.

2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 12ல் தனது ரசிகர் மன்றக்கொடியை அறிமுகப்படுத்தினார். அதை தொடர்ந்து 2001 ஆம் ஆண்டு நடந்த உள்ளாட்சி தேர்தலில் ரசிகர் மன்றத்தை சேர்ந்த நிர்வாகிகள் பல்வேறு இடங்களில் சுயேட்சையாக போட்டியிட்டு, பலர் வெற்றியும் அடைந்தனர். 2002ல் ராஜ்ஜியம் படத்திலிருந்து அரசியல் குறித்த வசனங்கள் அவரின் படங்களில் பட்டாசாக வெடிக்கத் தொடங்கின. அப்படி விஜயகாந்தின் இந்த அரசியல்

நகர்வுகளையும் புரிந்து கொண்டதாலேயே ஆளும் அரசியல் கட்சிகள் அவருக்குப் பல நெருக்கடிகளையும் கொடுத்து வந்தன.

அதே வேளையில் அரசியலுக்கு வர, சரியான களத்துக்காக, (காரணத்திற்காக) காத்துக் கொண்டிருந்தார் விஜயகாந்த். கள்ளக்குறிச்சியில் தன் ரசிகர்மன்ற நிர்வாகி ஒருவரின் திருமண விழாவில் விஜயகாந்த் வருகையை முன்னிட்டு கட்டப்பட்ட மன்ற கொடிக் கம்பங்களை பா.ம.க வினர் வெட்டி சாய்த்ததாகச் சொல்லப்பட்டது. அதைத் தொடந்து நடந்த திருமண நிகழ்வில் ராமதாஸையும், அவரின் மகன் அன்புமணி ராமதாஸையும் விஜயகாந்த் விமர்சிக்க, பதிலுக்கு விஜயகாந்த்தை ராமதாஸ் விமர்சிக்க, ராமதாஸ் விஜயகாந்த் மோதல் பா.ம.க தொண்டர்கள் விஜயகாந்த் ரசிகர்கள் என விரிவடையத் தொடங்கியது. பல இடங்களில் விஜயகாந்த் மன்றக் கொடிகள் வெட்டி சாய்க்கப்பட, மன்ற நிர்வாகிகள் கடுமையாக தாக்கப்பட்டனர். விஜயகாந்த் நடித்த "கஜேந்திரா" படத்திற்கு ராமதாஸால் சிக்கல் எழுந்தது. விஜயகாந்தைக் கடுமையாக விமர்சித்து வட மாவட்டங்களில் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. கண்கள் சிவக்க வெகுண்டெழுந்தார் விஜயகாந்த். ஊர், ஊராகச் சென்று தன் ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க ஆரம்பித்தார். சென்ற இடமெல்லாம் விஜயகாந்திற்கு பலத்த வரவேற்பு கிடைத்தது. விஜயகாந்தைக் காண மக்கள் கூட்டம் அலைமோதியது திருவண்ணாமலையில் கட்சி அறிவிப்பு, ஈரோட்டில் கட்சி தொடங்கும் தேதி, மாநாடு அறிவிப்பு என அதிரடி காட்டத் தொடங்கினார் விஜயகாந்த். அந்த நேரத்தில் கோயம்பேடு மேம்பால விரிவாக்கத்திற்காக விஜயகாந்தின் மண்டபம் கையகப்படுத்தவிருப்பதாக தேசிய நெடுஞ்சாலையிடமிருந்து விஜயகாந்திற்கு நோட்டீஸ் வந்தது. இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டு



செப்டம்பர் 14 ஆம் தேதி மிகப்பெரிய மாநாட்டை மதுரையில் நடத்தி **"தேசிய முற்போக்கு திராவிட கழகம்"** எனும் அரசியல் கட்சியைத் தொடங்கினார். கட்சி ஆரம்பித்து ஓராண்டு ஆகாத நிலையில் 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தலில் தனித்துப்போட்டி என்று கூறி 232 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியவர். பா.ம.க கோட்டையான விருத்தாசலம் தொகுதியில் அமோக வெற்றி பெற்றார். மற்ற இடங்களில் வேட்பாளர்கள் தோற்றாலும் கணிசமான வாக்குகளைப் பெற்று தே.மு.தி.கவிற்கு 8.4 சதவீத வாக்குகளைப் பெற்றுத்தந்தனர். அதை தொடர்ந்து 2009 ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தனித்து நின்று தோல்வியைத் தழுவினாலும், 10 சதவீத

வாக்குகளை தே.மு.தி.க பெற்றது. தனித்தே போட்டியிட்டு வந்த விஜயகாந்த் முதன் முறையாக 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்தித்தார்.



41 இடங்களில் போட்டியிட்ட தே.மு.தி.க. 29 இடங்களில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்றது. ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற விஜயகாந்த் முதன் முறையாக சட்டமன்றக் எதிர்க்கட்சித் தலைவரானார். 2011 ஆம் ஆண்டு சட்ட மன்றத்தேர்தல் முடிந்து நடந்த முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே விஜய்காந்திற்கும், ஜெயலலிதாவிற்கும் மோதல் ஏற்பட்டு அதிமுக-தேமுதிக கூட்டணி முறிந்தது. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத்தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம் பெற்று தேர்தலை சந்தித்த தே.மு.தி.க போட்டியிட்ட 14 தொகுதியிலும் படுதோல்வியடைந்தது. 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ம.தி.மு.க., வி.ச.க, தாமா.க, கம்யூனிஸ்ட் கட்சிகள் அங்கம் வகித்த மக்கள் நல கூட்டணியில் இணைந்து முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு தேர்தலை சந்தித்தார் விஜயகாந்த். ஆனால், தேர்தல் முடிவில் மக்கள் நல கூட்டணி உட்பட தே.மு.தி.கவும் போட்டியிட்ட 104 தொகுதியிலும் படுதோல்வி யடைந்தது.

உளுந்தூர் பேட்டையில் போட்டியிட்ட விஜயகாந்த் மூன்றாம் இடத்திற்கு தள்ளப்பட்டு டெபாசிட் இழந்தார். 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலிலும், அதிமுக -பா.ஜ.க கூட்டணியில் இடம் பெற்று நான்கு தொகுதியில் மட்டுமே போட்டியிட்ட தே.மு.தி.க அனைத்திலும் தோல்வி அடைந்தது.

தனித்து போட்டியிட்ட போது 8.4 சதவீதம், 10 சதவீதம் ஆக இருந்த



தே.மு.தி.க.வின் வாக்கு வாங்கி கூட்டணிக்கு சென்ற பின்பு 7.9 சதவீதம், 6.1 சதவீதம் என குறைந்து 2016 ல் சட்டமன்ற தேர்தலில் 2.4 சதவீதமாக சரிந்தது. நிர்வாகிகள் பலர் அதிமுகவிற்கும், திமுக விற்கும் சென்றனர். கூட இருந்தவர்களின் துரோகத்தை தாங்க முடியாமல் (உண்மையான நட்பை நேசித்ததால்) இந்த கருப்புநிலா கலங்கியது. படிப்படியாக விஜயகாந்தின் உடல்

நிலையும் மோசமடைந்தது. தொடர்ந்து 2021 ல் சட்டமன்ற தேர்தலில் அ.ம.மு.க. வுடன், தே.மு.தி.க. கூட்டணி அமைத்து சந்தித்த தேர்தலில் விஜயகாந்த் போட்டியிடவில்லை. அவரின் மனைவியும் கட்சியின் பொருளாளருமான பிரேமலதா விருத்தாச்சலம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்தார்.

விஜயகாந்தின் மேல் சிகிச்சைக்காக வெளிநாடுகள் சென்று கிட்னி மாற்று அறுவை சிகிச்சை, பைபாஸ் போன்றவை பண்ணிய போதும் உடல் நாளுக்கு நாள் நலிவடைந்து கொண்டே வந்தது. அவரது கம்பீரக்குரல் என்று போனதோ அன்றே அவரும், அவர் கட்சியும் தொய்வை கண்டது, விஜயகாந்த் படங்கள் எல்லாம் பெரும்பாலும், வெற்றி பெற்றவை தான் சினிமாவில் அநியாயங்களை கண்டால் எந்த அளவு பொங்கி எழுவாரோ, அதே போல் தான் நிஜ வாழ்விலும் விஜயகாந்த் நடந்து கொண்டார் இரும்புப் பெண்மணி என்றழைக்கப்பட்ட மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவையே எதிர்த்தவர்தான் இந்த கேப்டன். அவரது உடலில் என்ன வியாதி என்று பலரும் தெரிந்து கொள்ள ஆவலாக இருந்த போதிலும், அது தெரியாமலேயே போய்விட்டது.

தி.மு.க.வின் தலைவரும் ஐந்து முறை தமிழக முதல்வருமாக இருந்து சாதித்தவருமான கலைஞரும், அவரது மகனும் தற்போதைய முதல்வருமான ஸ்டாலினையும் மிக மூர்க்கமாக எதிர்த்து தான் அரசியலை வளர்த்தார். தானும், அரசியலில் வளர்ந்தார். இவ்வாறு குறுகிய காலத்தில் மிக அற்புதவளர்ச்சி அடைந்த கேப்டன் விஜயகாந்த், தீவீர உடல் பாதிப்பால், சிகிச்சை பெற்று வந்து டிசம்பர் 28, 2023



அன்று சென்னையில் தனியார் மருத்துவமனையில் காலமானார். இவரது உடல் அவரது சாலிகிராமத்தில் உள்ள அவரது வீட்டிற்கு எடுத்து செல்லப்பட்டு, மரியாதை செய்யப்பட்டது பின்னர் தே.மு.தி.க கட்சி தலைமை அலுவலகத்தில் முதல் நாள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பிறகு 2023 டிசம்பர் 29 அன்று அதிகாலை பொதுமக்கள் அஞ்சலிக்காக சென்னை தீவுத்திடல் மைதானத்தில் வைக்கப்பட்டது. பிரமாண்ட இறுதி ஊர்வலத்திற்குப்பின் மாலையில் தேமுதிக கட்சித் தலைமை அலுவலகத்தில் அரசு மரியாதையுடன் **“புரட்சி கலைஞர் கேப்டன் விஜயகாந்த்”** எனப் பொறிக்கப்பட்டிருந்த சந்தன பேழையில் வைக்கப்பட்டு அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. 2024 ஜனவரி 3 அன்று பிரதமர் மோடி மறைந்த விஜயகாந்திற்கு தன் அதிகாரபூர்வ வளைதளத்தில் புகழுரை எழுதினார்.

சட்டமன்றத்தில் கடுமையாக நடந்து கொண்டது, வேட்பாளரை

SETHIKALAVAI INDIA

அடித்தது, மனைவி மைத்துனர் ஆதிக்கத்தில் கட்சியை விட்டது, ராவுத்தரை பிரிந்தது என இவர் மீது முன் வைக்கப்படும் விமர்சனங்கள் பல இருப்பினும், தனிப்பட்ட முறையில் அனைவராலும் நேசிக்க கூடிய நல்ல மனிதராகவே வாழந்தார் என்பதில் எவருக்கும் ஐயமேதுமில்லை.

" வாழ்ந்தவர் கோடி, மறைந்தவர்



கோடி மக்கள் மனதில் நின்றவர் யார் என்றால் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவிற்கு பின் புரட்சி கலைஞர் விஜயகாந்த் மட்டுமே" விஜயகாந்த் மறைந்தாலும் பலரது உள்ளங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருப்பார்.

**கேப்டன் விஜயகாந்த் வென்ற விருதுகள்**

இவர் இரண்டு பிலிம்பேர் விருது, மூன்று தமிழக அரசு திரைப்பட விருது, தமிழ்நாட்டின் குடிமகன்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான கலைமாமணி விருது, நடிகர் சங்கத்தில் (2000 2006) மாற்றத்தை ஏற்படுத்தியதற்காக இவரது தலைமத்துவத்திற்காக இவர் கேப்டன் என்ற பட்டப்பெயர் பெற்றார். புரட்சிகரமான பாத்திரங்களில் நடித்ததால் இவர் புரட்சிக்கலைஞர் பட்டம் தாணுவிடம் இருந்து பெற்றார். ஏழைக்குடும்பங்களுக்கான உதவி மற்றும் தமிழ் திரைத்துறையின் நலிவுற்ற நடிகர் களுக்கான உதவிகள் ஆகிய மனிதாபிமான உதவிகளை வழங்கிய தன் காரணமாக இவர் கருப்பு எம்.




ஜி.ஆர். என்ற பட்ட பெயரும் பெற்றார். முத்தாய்பாக சிறந்த இந்தியப் குடிமகன் விருது ஐ.நா. சபையின் மனித உரிமைகள் கமிஷன் தலைவர் நீதிபதி பி.என்.பகவதி வழங்கினார். தற்போது மத்திய அரசு 2024 ஆம் ஆண்டிற்கான விஜயகாந்திற்கு பத்மபூஷன் என்ற உயரிய விருதினை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கருப்பு நிலா கேப்டன் விஜயகாந்தின் திரைப்படங்கள் எப்போதும் மக்கள் மத்தியிலும் இவரது ரசிகர்கள் மத்தியிலும் இவரது புகழை என்றும் பறை சாற்றி கொண்டே தான் இருக்கும். இவரும் உலக அரங்கில் உள்ள ஒட்டு மொத்த தமிழர் மத்தியிலும் நினைவில் நிற்பார். இவரது புகழ் என்றும் நிலைத்து நிற்கட்டும் **என்றும் நாமும் விஜயகாந்தை நினைவு கூறுவோம்.**

V. சிவக்குமார் B.A.

# செய்திக்கலவை
தமிழ்மாத இதழ்

## பத்திரிக்கை சந்தாதாரர் படிவம்

வரிசை எண் :

பெயர் : த/பெ. :

நிரந்தர முகவரி :

பாலினம் : தொழில் :

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் செய்திக்கலவை இதழுக்கு, ஆயுள் / ஆண்டு சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் இதழ்களை அனுப்பிடுமாறு அன்புடன் கேட்கிறேன்.

**சந்தா கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | : | ரூ 5000/- |
| பத்தாண்டு சந்தா | : | ரூ 2500/- |
| ஐந்தாண்டு சந்தா | : | ரூ 1250/- |
| ஆண்டு சந்தா | : | ரூ 250/- |
| நன்கொடை | : | ரூ |

திரு / திருமதி :

தொலைபேசி எண் : கைப்பேசி :

நாள் :

இடம் :

SEITHI KALAVAI INDIA

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை, ஆசிரியர் செய்திக்கலவை இதழ், 86, மருதம் காம்பளக்ஸ், காமராஜர் பாதை, சிங்காநல்லூர் பேருந்து நிலையம் எதிரில், கோயமுத்தூர் : 641015 என்ற முகவரிக்கு அனுப்பவும். டி.டி. அல்லது காசோலைகளை செய்திக்கலவை என்ற பெயரில் அனுப்பிவைத்திடவேண்டுகிறோம். சந்தாதார்களுக்கு பின்னர் பணப்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விபரம்**

Seithi kalavai : CURRENT ACCOUNT Account No. : 6392790122

Bank Name : Indian Bank, Sundarapuram Branch, IFSC Code : IDIB000S261



# அயலான் திரைப்பட விமர்சனம்

அண்டங்களில் வாழும் வேற்றுகிரக மனிதர்கள் பூமிக்கு வருவதும், அவர்களால் பூமியில் வாழும் மனிதர்களுக்கு ஆபத்து வருவதும் என இதுவரை ஹாலிவுட் ஆங்கில படங்களில் இருந்து நாம் தெரிந்து கொண்ட விஷயம். ஆனால், இத்திரைப்படத்தில் பூமிக்கு வரும் ஆபத்தை தடுத்து நிறுத்தி இங்குவாழும் மனிதர்களை காப்பாற்றவே வேற்று கிரகத்திலிருந்து பூமிக்கு வரும் மனிதனைப்பற்றிய கதை வித்தியாச மாகத்தான் இருக்கிறது.

இதுபுதிய கதைக்களம் என்றே சொல்லலாம். இன்று நேற்று நாளை என்ற கால பயணத்தை பற்றிய ரசிக்கும் படியான ஒரு தமிழ் திரைப்படத்தை கொடுத்த இயக்குனர் ரவிக்குமார்தான் “அயலான்” என்னும் தலைப்பிலான புதிய கோணத்தில் இந்த படத்தையும் இயக்கி வெளிக்கொணர்ந்துள்ளார். பொதுவாகவே ஒவ்வொரு காட்சி களையும் உள்வாங்கிக்கொண்டு அதைரசித்து (ருசித்து) படைத்திருப்பது பாராட்டுகுறியதே. சரி இனி கதைக்குள் செல்வோம்.

பூமிக்குவரும் விண்கல்லிருந்து சிதறிய ஒரு பொருள் வில்லங்கமான மனிதனிடம் கிடைக்கிறது. (ஷரத்கெல்கர்) அதை வைத்து பூமியின் மையப்பகுதியை தோண்டி அதில் கிடைக்கும் எரிபொருள்களை (வளங்களை) எடுப்பதற்கான திட்டத்தினை தொடங்குகிறார். இதை அறிந்த வேற்று கிரக வாசிகள், இந்த செயலால் பூமியே அழிந்து விடும் என்பதை தெரிந்து அதை காப்பாற்ற தங்கள் நாட்டை சேர்ந்த ஒரு மனிதனை (வேற்றுகிரகவாசியை) பூமிக்கு அனுப்பி வைக்கின்றனர். வில்லனுக்கும் அந்த மனிதனுக்கும் ஏற்படும் மோதலால் (ஸ்பார்க்) சிதறிய பொருளை மீட்டுதான்வந்த விண்களத்தை பறிகொடுத்துவிட, அதே சமயம் இயற்கை வளங்களில் நாட்டம் கொண்ட கிராமத்து விவசாயியான (சிவகார்த்திகேயன்) தமிழ்தன் பிழைப்புக்காக சென்னை வர, அங்கு வேற்றுகிரகவாசி நட்பு ஏற்பட, அதற்கு டாட்டு என பெயர்வைக்க இருவரும் இணைந்து விண்களத்தை மீட்க போராடுகின்றனர் என்பதற்கான கதைகளம் தான் இது.



கதாநாயகன், வேற்றுகிரகவாசி

நண்பர்கள் என இவர்களை சுற்றி உருவாக்கப்பட்ட நகைச்சுவை காட்சிகள் ரசிக்கும் படியாகவே உள்ளது. சண்டை காட்சிகளும் பார்க்கும் படியாகவே உள்ளது. சிவகார்த்திகேயன் கதாபாத்திரத்திற்கு தேவையான விஷயங்களை நன்குணர்ந்தே செயல்பட்டிருக்கிறார். நாயகனின் கிராமத்து நண்பன் பாலசரவணன் மற்றும் நகர நண்பர்களான யோகிபாபு, கருணாகரன் ஆகியோர்களின் நகைச்சுவையில் சிரிக்கலாம்.

சித்தார்த்தின் குரலில் டாட்டு கதாபாத்திரம் மனதில் நிற்கிறது. இஷா கோபிகர் நடிப்பு பிராசிக்கவில்லை. முத்துராஜின் கலை இயக்கம் எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஏ. ஆர்.ரகுமான்



இசையும் இத்திரைப்படத்தில் உண்டு. இத்திரைப்படத்தின் கிராஃபிக்ஸ் காட்சிகள் வெகுவாக பாராட்ட படவேண்டிய விசயம் தான். கதாநாயகனும், டாட்டூவும் சேர்ந்து விண்களத்தை மீட்பார்களா? பூமிகாப்பற்றப்பட்டதா? என்பது திரையில் காண வேண்டிய காட்சிகள். ஆக மொத்தம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பார்த்து சிரித்து ரசிக்கலாம்.

**அயலான் அருமை**

**திரைப்பட விமர்சன குழு**







**செய்திக் கலவை**
மாத இதழ்

**பதிவு அலுவலகம் :**
86, மருதம் காம்பளக்ஸ், காமராஜர் பாதை,
சிங்காநல்லூர், கோவை - 641 015.
தொலைபேசி 0422 2670748

இதழ் வளர்ச்சியில் உறுதுணை :
குற்றவியல் வழக்கறிஞர் முனைவர்
**ஐயா ஏ.பி.ஜெயச்சந்திரன்**
M.A., (Crimin), M.Phil (Police Admin),
Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD .,M.Sc.,(PSY)
வெளியிடுபவர், ஆசிரியர் :
S.R. **பாரதிராஜா**
செல் : 98946 09748, 94874 09748



V. **சிவக்குமார்** B.A. துணை ஆசிரியர்
M. **ஷாஜஹான்** B.Sc உதவி ஆசிரியர்
A. **சக்திவேல்** MBA உதவி ஆசிரியர்
P. **ஜோதிமணி** ECE செய்தி ஆசிரியர்
P. **ரமேஷ்கண்ணன்** முதன்மை தலைமை நிருபர்
G. **பாலாஜி** B.Sc., IT, M.S (Networking Australia) கணணி நிருபர்
L. **சண்முகசுந்தரம்** தலைமை புகைப்பட நிருபர்
I. **இந்திரகுமார்** சென்னை மாவட்ட நிருபர்
V. **ராஜ்மோகன்** M.A கோவை மாவட்ட நிருபர்
A. **பாண்டியம்மாள்** BBA திண்டுக்கல் மாவட்ட நிருபர்
C. **கஜேந்திரன்** IT ஈரோடு மாவட்ட நிருபர்
S. **சோமசுந்தரம்** M.A திருப்பூர் மாவட்ட நிருபர்
K. **கீதாஞ்சலி** காஞ்சிபுரம் வடக்குபகுதி மாவட்ட நிருபர்
S.S. **ஜானகிராமன்**–கோவை கிழக்கு பகுதி மாவட்ட நிருபர்
M. **ரமேஷ்முருகன்** M.S. Ph.D கோவை தெற்கு பகுதி மாவட்ட நிருபர்
S. **பிரபாகரன்** கோவை மாநகர் நிருபர்
P. **தங்கதுரைபாண்டி** IMA ஆலோசகர்

**நிருபர்கள்**

S. **கருணாகரன்** B.A J. **வர்க்கீஸ்வனத்தையன்** B.A
K. **கோவிந்தராஜ்** M. **சவுந்தரராஜன்** DMT (PT)
S. **ராணி** **வசந்தகுமாரி** S.R. **வைஷ்ணவி**
R. **தமிழ்செல்வன்** B. **திருநாவுக்கரசு**
K. **மஞ்சுளாதேவி** R. **அந்தோணி** M.A
திண்டுக்கல் புகைப்படகலைஞர் நிருபர்



தகவல் பரிமாற்றத்திற்கு
E-mail: editorseithikalavai@gmail.com | www.seithikalavai.com



கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்களுக்கு கட்டுரை யாளர்களே பொறுப்பு. புலனாய்வுச் செய்திகளை இயன்ற வரை தீவிர விசாரணைக்குப் பின்னரே அச்சிலேற்றுகிறோம். சில சமயங்களில் சம்பந்தப்பட்டவர்களே அவர்கள் மீதான செய்திகளுக்கு உரிய பதில் அளிப்ப தில்லை. எனவே, வெளியாகும் செய்திகளில், சம்பந்தப் பட்டவர்களுக்குக் கருத்துபேதம் இருந்தால், அது குறித்து அவர்கள் தரப்பு விளக்கத்தை அளிக்கலாம். விளம்பரங் களின் உண்மைத் தன்மைக்கு அவர்களே பொறுப்பு. கட்டுரைகள், செய்திகளைச் சுருக்கி வெளியிட ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION COIMBATORE CITY COURTS ONLY. NOTHING IN 'SEITHI KALAVAI' MONTHLY IS INTENDED TO DEFAME ANY PERSON, BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.



# மேற்கு வங்காளத்தில் என்ன நடக்கிறது? ஒரு பார்வை....

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மேற்கு வங்க மாநிலத்தில் நடக்கிறது. அந்த கட்சியின் தலைவரான மம்தா பானர்ஜி முதல்வராக உள்ளார். இந்நிலையில்



தான் மேற்கு வங்க மாநிலத்தில் நடக்கும் சம்பவங்கள்அவ்வப்போது தலைப்பு செய்தியாகி வருகின்றன. அந்த வகையில் கடந்த ஒரு மாதமாக மேற்குவங்க மாநிலத்தின் 24 வடக்கு பர்கானாஸ் மாவட்டம் செய்திகளில் இடம் பிடித்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் 24 வடக்கு பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள சந்தேஷ்காலி கிராமத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பிரமுகரான ஷாஜகான் ஷேக்தான். இவர் மீது ரேஷன் ஊழல் புகார் எழுந்தது. இதையடுத்த கடந்த ஜனவரி 5ம்தேதி அமலாக்கத்துறையினர் அவரது வீட்டில்அதிரடியாக சோதனை மேற்கொண்டனர். இந்த வேளையில்அவரது ஆதரவாளர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளை தடுத்து நிறுத்தி தாக்கினர். இதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு ஷாஜகான் ஷேக் தலைமறைவானார். இந்த சம்பவத்தை தொடர்ந்து தான் ஷாஜகான் ஷேக் மீது பெண்கள் பரபரப்பான புகார்களை முன்வைக்க தொடங்கினர். அதாவது ஷாஜகான் ஷேக் அங்கிருப்பவர்களை மிரட்டி நிலத்தை அபகரிப்பதோடு, பெண்களை பலாத்காரம் செய்து மிரட்டி தொல்லை கொடுப்பதாகவும் கூறினர். இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மேலும், ஷாஜகான் ஷேக்கை கைது செய்ய வேண்டும் என பெண்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்த தொடங்கினர். ஷாஜகானின் கூட்டாளியான ஷிபாபிரசாத் ஹஸ்ராவுக்குச் சொந்தமான கோழிப்பண்ணைகளை போராட்டக் காரர்கள் எரித்ததால் பதற்றம் அதிகரித்தது. மேலும், பெண்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த போராட்டத்துக்கு பாஜகவினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இதனால்,



பதற்றமான சூழல் ஏற்பட்ட நிலையில் கிராமத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்பிறகு கொல்கத்தா நீதிமன்றம் போட்ட உத்தரவால் 144 தடை உத்தரவு

அகற்றப்பட்டது. இந்நிலையில் தான் சந்தேஷ்காலி கிராமத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும் எனக்கூறி தொடர்ந்து போராட்டம் நடந்து வருகிறது. இந்த சம்பவத்தால் சந்தேஷ்காலி கிராமத்தில் கடந்த ஒன்றரை மாதத்துக்கும் மேலாக பெரும் பரபரப்பு ஏற்பட்டு வருகிறது. அந்த கிராமத்துக்கு சென்று மாநில மகளிர் ஆணையம், தேசிய பட்டியலின ஆணையத்தினர் சந்திக்க முடிவு செய்தனர். இந்நிலையில் தான் தேசிய பட்டியலின ஆணையத்தை சேர்ந்த உறுப்பினர்கள் சந்தேஷ்காலி கிராமத்தில் பாதிக்கப்பட்ட பெண்களை சந்தித்து விசாரணை நடத்தி உள்ளனர். சந்தேஷ்காலி கிராமத்தில் விசாரணையை முடித்து ஆணையத்தின் தலைவர் அருண் ஹால்தார் ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் அறிக்கை தாக்கல் செய்ய உள்ளார். இதுபற்றி அருண் ஹால்தார் கூறுகையில், நாங்கள் சம்பவம் குறித்து அறிந்து விசாரணை நடத்தி உள்ளோம். மக்கள் நிறைய விஷயங்களை எங்களிடம் கூறியுள்ளனர். இன்னும் பலர் எங்களுடன் பேச விரும்புகின்றனர். இந்த முதற்கட்ட விசாரணை முடிந்த பிறகு அரசிடம் அறிக்கை தாக்கல் செய்ய உள்ளோம். நாங்கள் அரசியல் சார்ந்த அமைப்பு உள்ளது. நாங்கள் அரசியமைப்பின் ஒரு அமைப்பாக இயங்குகிறோம்' என்றார். இதுபற்றி பட்டியலினத்தவர்கள் தேசிய ஆணையத்தின் உறுப்பினரான அஞ்சு பாலா கூறுகையில், மேற்கு வங்க மாநிலத்தில் நடக்கும் சம்பவம் குறித்து முதல்வர் மம்தா பானர்ஜி எதையும் கூறாமல் இருக்கிறார். பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் தொடர்பான வழக்குப்பதிவு செய்யப்படவில்லை. மம்தா பானர்ஜி பெண் முதல்வராக இருந்தும், இப்படி அமைதியாக இருப்பது வெட்கக்கேடானது. இதனால் இந்த நாடு மம்தா பானர்ஜியை ஒருபோதும் மன்னிக்காது. இதனால் சந்தேஷ்காலி கிராமத்தில் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், மக்களுக்கு பாதுகாப்பான சூழல் இருக்காது' என தெரிவித்துள்ளார். இந்நிலையில் தான் பட்டியலின தேசிய ஆணையத்தின்





உறுப்பினரான அஞ்சு பாலாவின் கருத்து தான் தற்போது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சந்தேஷ்காலி கிராம வன்முறை தொடர்பாக ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என அவர் ஆக்ரோஷமாக கூறியுள்ளார். இதனால் தான் மேற்கு வங்க மாநிலத்தில் தேசிய பட்டியலின உறுப்பினர்கள் பரிந்துரை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதா? என்ற பெரிய கேள்வி எழுந்துள்ளது. இதனால் சந்தேஷ்காலி வன்முறை சம்பவம் என்பது மேற்கு வங்க மாநில அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. எதிர்க்கட்சியினர் போராட்டக்காரர்களுக்கு ஆதரவு அளிக்க தொடங்கினர். இதனால், போராட்டம் விஸ்வரூபம் எடுத்தது. மேலும் அந்த பகுதியில் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. இப்படி

பகுதியில் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. இதற்கிடையே தான் தேசிய பட்டியலின ஆணையத்தை சேர்ந்தவர்கள் நேற்று சந்தேஷ்காலி கிராமத்தில் சென்று விசாரணை மேற்கொண்டனர். பட்டியலின சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு ஏற்பட்ட கொடுமை பற்றி அவர்கள் விசாரித்தனர். தேசிய பட்டியலின ஆணையத்தின் தலைவர்



அருண் ஹால்தார் மற்றும் உறுப்பினர்கள் தனித்தனியாக விசாரணை மேற்கொண்டனர். இந்த விசாரணையின் அறிக்கை ஜனாதிபதி திரௌபதி முர்முவிடம் ஒப்படைக்கப்பட்டது. அறிக்கையை ஆணையத்தின் தலைவர் அருண் ஹால்தார் ஒப்படைத்தார். அந்த அறிக்கையில், மேற்கு வங்க மாநிலம் சந்தேஷ்காலி பகுதியில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. பட்டியலின சமுதாய மக்களுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளது. அவர்களை காப்பாற்ற வேண்டும் என்றால், ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என பரிந்துரைக்கப் பட்டுள்ளது. விரைவில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த தேசிய பட்டியலின ஆணையம் பரிந்துரைத்து உள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இந்த விஷயத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்மு எந்த மாதிரியான முடிவை எடுக்க உள்ளார் என்பது தற்போது பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியின் ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டதாகக் குற்றஞ்சாட்டிய மேற்கு வங்க காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலத்தில் 355வது சட்டப்பிரிவைப் பயன்படுத்தி அவசர நிலையைப் பிரகடனம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், மேற்கு வங்கத்தில் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

ராம்பூர்ஹாட் நகருக்கு அருகிலுள்ள போக்டுய் கிராமத்தில் இந்த கும்பல் ஆறு பெண்கள் மற்றும் இரண்டு குழந்தைகளை அவர்கள் வீட்டிலேயே அடைத்து எரித்துள்ளனர் எனவும், பலரும் அங்குள்ள திரிணாமுல் தலைவர் அனருல் ஷேக்கை தான் தாக்குதலில் ஈடுபட்ட ஒருவராகக் குறிப்பிட்டு உள்ளனர். சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் அனைவருமே அனருல் ஷேக்தான் தாக்குதலை நடத்தியதாகவும் அவருடன் இருந்தவர்கள் தான் வீடுகளுக்கு தீ வைத்ததாகவும் தெரிவித்தனர். சிறுபான்மையினருக்கு தனது அரசு கூடுதலாக சலுகை காட்டுவதாக கூற முடியாது. அப்படிப்பட்ட குற்றச்சாட்டு தவறு. எனது அரசு அரசியல் சட்ட கடமைகளை மட்டுமே செய்து வருகிறது என்று கூறியுள்ளார் மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி.

ரமேஷ்முருகன்



# ராணி–யின்

# சுவையான சமையல்



## சத்தான லட்டு



**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| கம்பு | : | 100 கிராம் |
| ராகி | : | 100 கிராம் |
| பச்சபயிறு | : | 100 கிராம் |
| உளுத்தம்பருப்பு | : | 100 கிராம் |
| பொட்டுக்கடலை | : | 100 கிராம் |
| வேர்க்கடலை | : | 100 கிராம் |
| பச்சரிசி | : | 100 கிராம் |
| நெய் | : | 100 கிராம் |
| எள் | : | 50 கிராம் |
| சுக்கு | : | 1 துண்டு |
| ஏலக்காய் | : | 5,6எண்ணிக்கை |
| கருப்பட்டி (அ) | | |
| கரும்புச்சர்க்கரை | : | 1/2 கிலோ |

**செய்முறை :** மேலே குறிப்பிட்ட தானியங்களை ஒரு கடாயில் தனித்தனியாக பொன்னறிமாகும் வரை வறுக்கவும். ஆறிய பின்பு, அரைத்துக் கொள்ளவும். மற்றொரு பாத்திரத்தில் சர்க்கரை பாகு கம்பி பதத்தில் காய்ச்சி ஒரு அகலமான பாத்திரத்தில் மாவைக் கொட்டி பாகை அதனுடன் சேர்த்து நெய், ஏலக்காய்த்தூள், சுக்குத் தூள் சேர்த்து உருண்டைகளாகப் பிடிக்கவும். இந்த சத்து மாவை சிறுவர் முதல் பெரியவர் வரை சாப்பிடலாம். கூழ் காய்ச்சியும் குடிக்கலாம்.

**சத்தான லட்டு ரெடி**

## பலாச்சுளை போளி



**தேவையான பொருட்கள்**

| | | |
|---|---|---|
| பலாப்பழம் (கொட்டை நீக்கியது) | : | 1/4 கிலோ |
| சர்க்கரை | : | 1/4 கிலோ |
| தேங்காய்த் துருவல் | : | 1 கப் |
| மைதா மாவு | : | 1/2 கிலோ |
| ஏலக்காய் | : | 5 |
| நல்லெண்ணெய் | : | 100 கிராம் |
| கேசரிபவுடர் | : | 1/2 ஸ்பூன் |
| உப்பு | : | 1 ஸ்பூன் |

**செய்முறை :**

முதலில் ஒரு பாத்திரத்தில் மைதா, உப்பு, சிறிது எண்ணெய் ஊற்றி, தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவும். பின், அதனை மூடி வைத்துக் கொள்ளவும். பலாப்பழத்தை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். பின்பு, அடுப்பை பற்ற வைத்து ஒரு வாணலியை வைத்து, அதில் சிறிது எண்ணெய் விட்டு, தேங்காய்த் துருவல் பொடித்து, ஏலக்காய், சர்க்கரை, கேசரி பவுடர், பலாச்சுளை சேர்த்து நன்றாக கிளறவும். அடுப்பை நிறுத்தி விட்டு இந்தக் கலவையை சிறிது சிறிதுதாக, பிசைந்து வைத்துள்ள மைதா மாவில் வைத்து தேய்த்து (பூரி அளவில்) தோசைக்கல்லில் போட்டு, வெந்த பிறகு, மறுபக்கம் திருப்பிப் போட்டு எடுக்கவும். இது சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

**பலாச்சுளை போளி ரெடி.**

SEITHIKALAVAI INDIA



# சிரித்தால் இன்பமயம்

**மனைவி** : ஏங்க, நீங்க யாரு என்ன சொன்னாலும் ஆமாம்னு தான் சொல்லுவீங்களா?

**கணவன்** : ஆமமாம் மா… …. …..

---

**சின்னா** : தோல்வியை கண்டு பயப்படக்கூடாதுன்னு என் மகன் கிட்ட சொன்னது தப்பாபோச்சு

**பொன்னா** : என்னாச்சு?

**சின்னா** : டுட்டோரியல் காலேஜிக்கு பீஸ் கட்ட பணம் ரெடி பண்ணு சொல்லிட்டு போறான்.

---

**ரங்கு** : என் மகன் பாஸ் ஆயிட்டான்

**பரமு** : அதை ஏம்பா கவலையாய சொல்லற?

**ரங்கு** : ஒரு பொம்பிள்ளைக் கூட்டத்துக்கு பாஸ் ஆகியிட்டாம்பா..

---

**நடிகன்** : போன படத்தில் கதாநாயகர் தூணை புடுங்கி அடிக்கிறதா சொன்னீங்க அதை மக்கள் ஏத்துக்கிட்டாங்க, ஆனா… இந்த படத்தில கோயிலையே புடுங்கி அடிக்கிறாதா சொல்றது ஓவரா இருக்கே…..

**ராமு** : சட்டையின் முழுக்கையை மடிச்சு, மடிச்சு விடரதா போன வாரம் பூரா காட்டுன சீரியல் டைரக்டர், இந்த வாரம் விறுப்விறுப்பா இருக்கப் போகுதுனு சொன்னாராமே

**சோமு** : சட்டையின் காலரை தடவி விட்டுட்டு, பாக்கெட்டில கையை விட்டுட்டு, சட்டையின் கையை பிரிச்சி விட்டுட்டு கடைசியிலே சட்டையை வேகமாக சுருட்டி வீசரதா சீன் வச்சிருக்காராம்.

---

**ரோகேஷ்** : நீ என்னடா பேஸ்ட்யூஸ் பண்ணரே?

**ராகேஷ்** : சின்னு பேஸ்ட்

**ரோகேஷ்** : என்ன சோப் யூஸ் பண்ணரே?

**ராகேஷ்** : சின்னு சோப்

**ரோகேஷ்** : என்ன பவுடர் யூஸ் பண்ணரே?

**ராகேஷ்** : அதுவும் சின்னுதுதான்

**ரோகேஷ்**: என்ன பிராண்ட் டா அது?

**ராகேஷ்**: என் ரூம் மேட் பேருடா அது?

S.S. ஜானகிராமன்

**The Registrar of Newspapers for India TNTAM/64745/2015**
**Owned and Published by S.R. BARATHIRAJA** from 53, V.O.C. Colony, SIDCO Post, Near L.I.C. Colony, Coimbatore - 641 021 and Printed by P. Manoharan at Suriya Offset Printers, D.No. 64, 8th Street, Cross Cut Road, Gandhipuram, Coimbatore - 641 012.
**Editor : S.R. BARATHIRAJA Cell : 98946 09748, 94874 09748**

# Dr. வேதகிரி கணேசன்

Ph.D., MPMF. PP. Prof.

சென்னை மருத்துவக் கல்லூரி
ஹைதராபாத் மத்திய அரசு நிறுவனமான
சமுதாய மேம்பாட்டுத்துறை உளவியல் நிபுணர்.



பஞ்சாப் லூதியானா மத்திய அமைச்சக தொழிலாளர் நல உளவியல் துறை நிபுணர். மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் சென்று அங்குள்ள உளவியல் நிபுணர்களுக்கு பயிற்சி கொடுத்தவர். பல விருதுகள் பெற்றவர்.

கொல்கத்தாவை தலைமையிடமாக கொண்டு இந்திய தேசத்தின் அனுபவம் முதிர்ந்த விஞ்ஞானிகள் இணைந்து செயல்படும் அகில இந்திய விஞ்ஞான காங்கிரஸ் சங்கம் சார்பாக வழங்கிய, உயரிய விருதான "இளம் விஞ்ஞானி" (உளவியல் துறை) என்ற பட்டத்தை பெற்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்து தந்தவர்.

கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழக உளவியல் துறைத் தலைவாராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.
இவர் நமது செய்திக் கலவை வாசகர்களுக்காக "மனிதம் மலர்ந்திட மறுமலர்ச்சி" என்ற தலைப்பில் வாழ்வியல் தொடர் மாதந்தோறும் விரைவில் எழுத உள்ளார்.

SEITHIKALAVAI – MONTYLY The Registrar of Newspapers for the India TNTAM/64745/2015



மார்ச் 1 ம் தேதி பிறந்தநாள்காணும்

# தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்**

அவர்களுக்கு எங்கள் செய்திக்கலவை
குழுமத்தாரின் இனிய பிறந்தநாள்
நல்வாழ்த்துக்கள்

E-mail: editorseithikalavai@gmail.com

www.seithikalavai.com